O.S. No. 43 /2007 நாள். 28.10.2022

PW1 – ராஜகோபால்

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வா.சா.ஆ.9 வது ஆவணமானது இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பு தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 வது ஆவணத்தின் விவரத்தை எனது வழக்கிலும், நிரூபண வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 வது ஆவணம் உத்தரவை ஆட்சேபித்து 1ம் பிரதிவாதி தரப்பில் மாவட்ட வருவாய் அலுவலர் முன்பு மேல்முறையீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான், உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய கோரி உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்படி உத்தரவு என்னிடம் உள்ளதா என்றால் அதன் நகலை வைத்துதான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. மேற்கூறிய வா.சா.ஆ.3 உத்தரவின் மேல் மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவின் மேல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மேல்முறையீடு செய்தேனா என்றால் இல்லை. மேல்கூறிய மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு உத்தரவின் பேரில் பிரதிவாதி 2 மற்றும் 3 தரப்பினர்களாக இவ்வழக்கில் சேர்த்தேன் என்றால் நான் மேல்முறையீடு செய்யவில்லை. மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவும் எனக்கு பாதகமாக உள்ளதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியரிடம் தாவா சொத்திற்கு மயானம் என தாக்கலாகி வந்ததை ரத்து செய்து வெள்ளாளர் சொசைட்டி பெயருக்கு பட்டா வழங்க கோரி மனு செய்தேனா என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 ஆவணங்கள் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்ததன் பின்பு

பெறப்பட்டது என்றால் தவறு. வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 ஆவணங்கள் 2009ம் ஆண்டு பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 ஆவணங்கள் மோசடியாக ஏற்பட்டது என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு சொத்து விவரத்தில் தாவா சொத்தில் கட்டுமானங்கள் உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்த சமையத்தில் கட்டுமானங்கள் இல்லை.

4. வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்புடைய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ஆவணம் எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதி தாவா சொத்தும், சர்வே எண்கள்.53/1, 53/2 ஒரே இடம் என்று கூறி வருவதால் இந்த ஆவணம் தாக்கல் செய்தேன். சர்வே எண்கள்.53/1, 53/2 வெவ்வேறு இடங்கள் என்று வா.சா.ஆ.14 ஆவணம் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 ஆவணங்கள் வருவாய் கோட்டாட்சியர் அலுவலரின் உத்தரவின் பேரில் ஏற்படுத்தப்பட்டது என்றும் மேற்படி உத்தரவு ரத்து செய்யப்பட்டதால் வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 ஆவணங்கள் செல்லக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.